" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள் வெள்ளிகிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** **"அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்ஞ்சொல்லும்**
**புன்மையாற் காணப் படும் "**

**பொருள் :** ஒருவனுக்கு அறத்தை நினைக்கும் நெஞ்சம் இல்லை என்பதை அவனுடைய புறங்கூறும் அற்பத் தன்மையால் அறிந்து கொள்ளலாம்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.3 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 20.9.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :195**

**பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள ஜெர்மனுஸ் ஒ்டலுக்கு 2.8.2007 அன்று வழங்கப்பட்ட வரைபட அனுமதி முறையானதுதானா? என்பதை ஆணையாளர் அவர்கள் ஆய்ந்து அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**மேயர் அவர்களின் தீர்மானம்–1**
**மாமன்ற தீர்மானம் எண் :196**

**திரு. என்.எம்.ஆர்.சுப்புராமன்**

மதுரை காந்தி என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். விடுதலை வீரர். இந்திய விடுதலை வேள்வியில் குடும்பத்துடன் சிறை சென்றவர். நகராட்சித் தலைவராக தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக நாடாளுமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை தொடங்கி சிறப்புற பணியாற்றினார். ஹரிஜனங்களின் தந்தை எனப் போற்றபட்டார். அக்காலத்தில் இளம் வயதில் நகராட்சித் தலைவரானார்.

இவரது காலத்தில் மதுரையில் பாதாளச் சக்கடைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அவனியாபுரம் கழிவுநீர் பண்ணை தொடங்கப்பட்டது. துப்புரவு தொழிலாளர்களுக்கென வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுத்தார்.

நகர் மக்களுக்காக மாடல் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை தொடங்கினார்.

நகராட்சி எல்லையில் ஜாதிகள் பெயரால் இருந்த தெருப்பெயர்களை மாற்றிட தீர்மானம் நிறைவேற்றினார். இவர் தோற்றுவித்த மதுரை கூட்டுறவு பால் விநியோக சங்கம் பின்னாளில் இவரது M.P. காலத்தில் அந்நாளைய துணை ஜனாதிபதி டாக்டர். எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களால் ஆவின் பால்பண்ணையாக மலர்ந்தது.

அந்நாளைய ஆங்கில அரசை எதிர்த்து நகராட்சிப் பகுதியில் யுத்த நிதி வசூலிக்கக் கூடாது என்று நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றினார்.

அமரர் வைத்தியநாதய்யரடன் இணைந்து அருள்மிகு மீனாட்சி கோவிலில் ஹரிஜனங்களை அழைத்துச் சென்றார்.

இவரது பெருமுயற்சியால் இந்தியாவின் முதல் காந்தி மியூசியம் 1959–ல் அந்நாளைய பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார்.

மதுரைக்கு பெருமை சோத்த பெருமனார்களில் மதுரை காந்தி என்றும் நினைவு கூர்ந்து அழைக்கப்படும் மறைந்து முன்னாள் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.என்.எம்.ஆர்.சுப்புராமன் அவர்களுக்கு மதுரை நகரில் சிலை நிறுவன மாமன்றம் தீர்மானிக்கிறது.

**மேயர் அவர்களின் தீர்மானம் –2**
**மாமன்ற தீர்மானம் எண் :197**

**திரு. ஏ.ஜி. சுப்புராமன்**

தேசிய பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே தமிழரசுக் கழகம், இளைஞர் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தில் பங்காற்றினார்.

இளம் வயதில் மதுரை நகராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அகில இந்திய நகர் மன்றத் தலைவர்களின் கூட்டமைப்புக்கும் செயலாளர் ஆனார். இவர் 1980 மற்றும் 1984–ம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தனது காலத்தில் நகரத்திலும், நகராட்சியிலும் பல சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். நகராட்சியின் கழிவுநீர் பண்ணையை விரிவுபடுத்தி நகரில் தூய்மை அதிகரிக்கச் செய்தார்.

மதுரை மாநகராக மலர்வதற்கு மதுரையின் கிழக்குப் பகுதி சாத்தமங்கலத்தை நகராட்சியுடன் இணைக்கச் செய்தார்.

இளைஞர் நலத்தில் பெரிதும் அக்கறையும், ஆர்வமும் கொண்டிருந்த காரணத்தால் மதுரையில் கால்பந்தாட்டக் கழகம் நிறுவி, அகில இந்திய கால்பந்துப் போட்டிகள் நடத்தினார். தமிழ்நாடு கால்பந்துக் கழகத்தில் தலைவராக இருந்த காலத்தில் மதுரை மாநகராட்சி ரேஸ்கோர்ஸில் மின்னொளி கால்பந்து மைதானமாக செய்வதற்கு பெருமுயற்சி மேற்கொண்டு சாதித்தார்.

இவரது காலத்தில் தான் சென்னைக்கு மதுரையிலிருந்து பகல் நேர வைகை எக்ஸ்பிரஸ் தொடங்கப்பட்டது. மதுரையிலிருந்து அகல ரெயில் பாதை அமைக்கவும் முயற்சி மேற்கொண்டார்.

கொடைக்கானில் டெலிவிஷன் அரங்கு அமைக்கப் பெற்றது இவர் காலத்தில் ஆகும்.

சென்னை உயர்நீதி மன்றக்கிளை மதுரையில் அமைக்க வேண்டும் என்று குரல் கொடுத்ததுடன் மத்திய அரசு அமைத்த ஜஸ்வந்த் சிங் கமிஷனிடம் தனது வேண்டுகோளை நியாயப்படுத்தி வற்புறுத்தினார். இத்தகைய பல நற்பணிகள் புரிந்த முன்னாள் மதுரை நகராட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த திரு.ஏ.சி.சுப்புராமன் அவர்களுக்கு மதுரை நகரில் சிலை நிறுவன மாமன்றம் தீர்மானிக்கிறது.

## 2) சி.டபிள்யு.2 /39182/ 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 12.10.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :198**
**பதிவு செய்யப்பட்டது**

**<u>3) B1 / 33907 / 2007</u>**

மதுரை மாநகராட்சி தமிழ்நாடு அரசு, சென்னை, அரசாணை எண்.116/3.04.2007 (நிதி / சம்பளம்) துறையின் அரசாணையின்படி அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பண்டிகை கால முன்பணம் ரூ.1,000/- என்பதை ரூ.2,000/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் மேற்படி அரசாணையின்படி பண்டிகை கால முன்பணம் ரூ.2,000/- வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :199</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**<u>4) B1 / 33908 / 2007</u>**

மதுரை மாநகராட்சி தமிழ்நாடு அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அரசாணை எண்.111/13.08.2007-ன்படி, சிறப்பு சேமநல நிதி பணிக்கொடைத் தொகை ரூ.5,000/- ஆக உள்ளதை ரூ.10,000/- ஆக உயர்வு செய்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் மற்றும் அரசாணையின்படி மாநகராட்சி பணியாளர்களுக்கு பணப்பயன்கள் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :200</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**<u>5) ந.பொ.1/ 04885 / 07</u>**

மதுரை மாநகராட்சியில் சாலை பணிகள், கட்டிட பணிகள் மேற்கொள்வதற்கும், மாநகராட்சிக்கு தேவைப்படும் பொருட்கள் மற்றும் சாலைகளை கொள்முதல் செய்வதற்கும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 த்தின் கீழ் மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-Tendering) முறை அமுல்படுத்தப்படுவதாகவும், இம்முறையின் கீழ் முதற்கட்டமாக மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவங்களை 01.07.2007 முதல் அரசு மற்றும் மாநகராட்சி இணைய தளங்களில் முழுமையாக வெளியிட வேண்டும் என்றும் இப்பணிக்கு தேசிய தகவல் ஆணையம் (National Informatics Centre) ஒருங்கிணைப்பாளராக செயல்படும் என்றும் வெளியிடப்பட்ட அரசாணை எண். 177, நிதி (சம்பளம்) துறை, நாள். 22.05.07 யும், ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை உரிய இணைய தளங்களிலிருந்து இலவசமாக இணையிறக்கம் (Download) செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ள அரசு சிறப்பு செயலாளர், நிதி (சம்பளம்) துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். 9125/நிதி (சம்பளம்) துறை/2007-11, நாள். 26.06.07 யும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையின் கீழ் இரண்டாவது கட்டமாக ஒப்பந்தப்புள்ளியை மின்னணு மூலம் சமர்ப்பிக்கும் (E-Submission) நடைமுறை 01.10.2007 முதல் அமுல்படுத்தப்படுவதாகவும், இம் முறை முழு அளவில் 01.01.2008 ல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண். 471, நிதி (சம்பளம்) துறை நாள். 30.09.07 யும் மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

(<u>குறிப்பு :</u> அரசின் அறிவுரையின் படி மதிப்பீட்டு தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக இணைய தளங்களில் (Website) 01.07.07 முதல் வெளியிடப்படுகிறது)

**<u>மாமன்ற தீர்மானம் எண் :201</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**<u>6) மே.ம.பொ.5 / 3652 / 2007</u>**

மதுரை மாநகராட்சி 71வது வார்டு பாஸ்டின் நகரில் அமைந்துள்ள செயின்ட்பால் சர்ச்சிற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பிற்கு குழாய் கட்டண விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கக்கோரி மேற்படி சர்ச்சின் நிர்வாகி (Parish Priest) கொடுக்கப்பட்டுள்ள கடிதம் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரால் நேராய்வு செய்து தரப்பட்ட குறிப்பின்படியும், மாநகராட்சி குடிநீர் விநியோகம் துணை விதிகள் 13 (எ) தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்படி சிறிய கோவில்கள், பள்ளிவாசல், மாதா கோயில்கள் இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குழாய் வீதம் கட்டணம் இன்றி வைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளதாலும் மேற்கண்ட சர்ச்சிற்கு குழாய் கட்டண விதிப்பிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> மேற்கண்ட சர்ச்சிற்கு வழங்கிய குழாய் இணைப்பிற்கு 2006–2007 வரை குழாய் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :202</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **19.10.2007**

* * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **அக்டோபர்** திங்கள் **26-ம்** நாள் **வெள்ளிக்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **ம.பொ.3/24592 / 2007**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.21–ல் உள்ள தத்தனேரி மாநகராட்சி துவக்க பள்ளியின் பகுதிக்குட்பட்ட ஓட்டு கட்டிட வகுப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :203**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

2) **ம.பொ.4/25737/2007**

மதுரை மாநகராட்சி தமுக்கம் மைதானத்தின் உள்புறம், கிழக்குப் புறமுள்ள காலியிடத்தில் அமைந்துள்ள உபயோகப்படுத்த முடியாத பழுதடைந்து அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ள மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :204**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

3) **Jn.S1/ 27913/2007**

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய மற்றும் மாநில அரசு ரூ. 74.29 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த ஆறு சிப்பங்களாக (6 Packages) பிரித்து ஒப்பந்தப்புள்ளி 31.08.07 ல் வரவழைக்கப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் ஆறாவது சிப்பமாகிய Dual Load Dumper Placer Vehicle with 2 Bins க்கு டெண்டர் வரப்பெற்றதில் கீழ்க்கண்ட ஆறு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. M/s. Eicher Motors.
2. M/s. Ashok Leyland.
3. M/s. Industrial Plants & Waste Treatment.
4. M/s. T.V. Sundaram Iyengar Sons Ltd.,
5. M/s. C.S. Body Builders (P) Ltd.,
6. M/s. Hydroair Tectonics (P) Ltd.,

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்பம் மற்றும் விலை விகித விபரங்கள் பட்டியலிடப்பட்டு மதிப்பாய்வுக் குழு பரிசீலனைக்கு 08.10.07 தேதி வைக்கப்பட்டது.

மதிப்பாய்வுக் குழுவில் வாகனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் அல்லாத பிற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப ரீதியாக நிராகரித்து கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் விலை விகிதம் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (வரிகள் உள்பட) | மொத்த விலை |
|---|---|---|---|---|
| 1. | M/s. Eicher Motors | 28 | 13,79,007 | 3,86,12,196 |
| 2. | M/s. Ashok Leyland | 28 | 12,45,000 | 3,48,59,999 |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வாகனங்கள் தயாரிக்கும் நிறுவனமாக இருப்பதாலும் அதில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/s. Ashok Leyland நிறுவனத்தை ஏற்றுக் கொள்ள மதிப்பாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது. மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்று M/s. Ashok Leyland நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :205**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 4) C.W.3/ 34162/ 2006

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு.வி.வி.மீனாட்சிசுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் (ஈ.கோ பார்க்) வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால் ஏற்கனவே வழங்கி வரும் சேவை கட்டணம் அடிப்படையில் 1.10.2007 முதல் 30.9.2008 வரை மேலும் ஓராண்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக டெக்ஸ்கோ பணியாளரின் சேவையை பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 1) ஏற்கனவே 30.9.2007 முடிய சேவை செய்யவும் அதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத் தீர்மான எண்.70, நாள்: 18.7.2007–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் மொத்த செலவு ரூ.78,312/-

2) 1.10.2007 முதல் ஒரு வருடத்திற்கு மேற்கண்ட சேவையை நீட்டிப்பு செய்து கொள்ள ஒப்பந்தப்பத்திரம் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.

3) 1.10.2007 முதல் 30.9.2008 முடிய சேவைக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5,484/- மற்றும் வரிகள் உட்பட மாதம் ஒன்றுக்கு மொத்தம் ரூ.6,526/- வீதம் ஓராண்டுக்கு ரூ.78,312/- செலவு ஏற்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் :206**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 5) Ma.Po.8/39657-3/07

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின்கீழ் வைகை இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி –3க்கு (5 மேல்நிலைத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு ஒப்பந்த ஊர்ஜித குழுவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத் தீர்மான எண். 165/26.9.2007-ன்படி பரிந்துரை செய்யப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் L1 ஒப்பந்தகாரர் திருவாளர்கள் பி&சி கன்ஸ்ட்ரக்ஷன் (பி) லிட், ஈரோடு. இரண்டாவது விலைக் குறைப்பிற்குப்பின் திருத்திய பொதுப் பணித்துறை (2007–2008) விலைப்பட்டியல் மதிப்பீட்டின் படி 23.37% அதிகம் குறிப்பிட்டுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை பொதுப்பணித்துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய விலை விகிதம் 2007–2008 ஆண்டின் படி ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது 12.35% மட்டுமே அதிகமாக இருப்பதால், மேற்படி திருவாளர்கள். பி.&சி கன்ஸ்ட்ரக்ஷன் (பி) லிட்., ஈரோடு அவர்கள் விலை விகிதத்தினை 5.10.2007–ம் அன்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு ஒப்பந்த ஊர்ஜிதக் குழுவில் ஏற்று ஒப்புதல் வழங்கியுள்ளதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :207**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 6) Ma.Po.8/Est.1525/ 2007-08

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் அனைத்து பயன்பாட்டிற்கும் நாளொன்றுக்கு தேவையான 3 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க இணை ஆணையர் மீனாட்சி திருக்கோயில் கடித எண்.363/2005-2/ஊ–1 நாள் : 12.6.2007 மூலம் வேண்டப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்கு கிழக்கு மண்டல அலுவலகத்திலிருந்து முனிச்சாலை, சாமி சன்னதி வழியாக குழாய் பதிக்க ரூ.24 லட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்

முழுச் செலவின தொகையினை கோவில் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் வணக்கத்திற்குரிய மேயர், மதுரை மாநகராட்சி அவர்களின் நேரடி விவாதத்தின்படி, மதிப்பீட்டில் 50% தொகை ரூ.12 இலட்சத்தை கோவில் நிர்வாகம் மாநகராட்சிக்கு செலுத்திட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே (அ) கோவில் குடிநீர் ஏற்பாட்டிற்கான மதிப்பீடு ரூ.24 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதலும், ஆ) மதிப்பீட்டில் 50% தொகை ரூ.12 இலட்சத்தை கோவில் நிர்வாக நிதியின் மூலமும், மீதி 50% தொகை ரூ.12 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செய்து முடிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :208</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 7) <u>ம.ந.5/ 31228/ 2007</u>

மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 10,89,892 ஆகும். மாநகராட்சி எல்லைக்குள் ஆண்டுக்கு 33000 பிறப்புகளும், 8000 இறப்புகளும், 1500 இறந்து பிறந்தவைகளும் நிகழ்கின்றது. 72 வார்டுகளிலும் இராஜாஜி மருத்துவமனை பதிவு மையத்திலும் பிறப்பு, இறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் ராசாசி மருத்துவமனை பதிவு மையத்திலும் கணினி மூலம் பதிவுகள் சான்று வழங்குதல் ஆகிய பணிகள் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் மேலும் சிறப்பாகவும், விரைந்தும் செயல்பட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

அ) இந்திய அரசின் 1969ம் ஆண்டைய பிறப்பு இறப்பு சட்டத்தின்படி பிறப்பு, இறப்பு பதிவு சம்பந்தமான அனைத்து பணிகளும் நடைபெறுகிறது. மதுரை மாநகராட்சியில் மேற்படி சட்டத்தில் தெரிவித்தபடி பொறுப்பு அலுவலர்கள் பதவிகள் அரசின் ஒப்புதல் பெறப்படவில்லை. இதனால் சட்ட ரீதியாக பிறப்பு, இறப்பு பதிவு சம்பந்தமான நீதிமன்ற நடவடிக்கைகளில் மாநகராட்சிக்கு சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், பொது மக்களின் கோரிக்கை மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும் மற்றும் சட்டத்தில் தெரிவித்துள்ளபடியும், சென்னை மாநகராட்சியில், தமிழ்நாடு அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசாணை எண். 1240/16.9.91ன் படி பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளது போல் மதுரை மாநகராட்சி பகுதிக்கு கீழ்க்கண்ட பொறுப்பு அலுவலர் பதவிகளை அரசின் ஒப்புதல் பெற்று ஏற்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| 1) | மாநகராட்சி பதிவாளர் | :ஆணையாளர், மதுரை மாநகராட்சி |
| 2) | கூடுதல் மாநகராட்சி பதிவாளர் | :நகர் நல அலுவலர் |
| 3) | சார் பதிவாளர் –1 | :உதவி நகர் நல அலுவலர் |
| 4) | சார் பதிவாளர் – II, III | :தலைமையிடத்து சுகாதார ஆய்வாளர்கள். |

மேற்கண்ட பதவிகளை மதுரை மாநகராட்சியில் ஏற்படுத்தி மேற்கண்டபடி அலுவலர்களை நியமிக்க தமிழ்நாடு முதன்மை பதிவாளர் சென்னை–6 அவர்கள் மூலமாக அரசின் ஒப்புதலைக் கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ஆ) 1970ம் ஆண்டு மதுரை நகராட்சியாக இருந்தபோது அப்போதைய மக்கள் தொகை அடிப்படையில் பிறப்பு இறப்பு பதிவு பணிகளை மேற்பார்வையிட புள்ளி விபர உதவியாளர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு, நாளது வரையில் சுமார் 35 ஆண்டுகளாக அதே பணியிட தகுதியில் புள்ளி விபர உதவியாளர் பணியிடம் நடைமுறையில் உள்ளது. மதுரை மாநகராட்சி மக்கள் தொகை அதிகரிப்பை கருத்தில் கொண்டும், சென்னை மாநகராட்சியில் மேற்படி பணிகளை மேற்பார்வையிட உதவி இயக்குநர் பணிநிலையில் புள்ளி விபர அலுவலர் (Statistical Officer) பணியிடம் உள்ளது போல் மதுரை மாநகராட்சியில் தற்போது உள்ள புள்ளி விபர உதவியாளர் பணியிடத்தை “உதவி இயக்குநர் ” பணி நிலையில் புள்ளி விபர அலுவலர் என்ற பணியிடம் ஏற்படுத்தித் தர இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களை கேட்டுக் கொள்ளலாம். மேற்படி பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசு பொது சுகாதார துறையில் இருந்து அயற்பணியில் (Deputation) மதுரை மாநகராட்சிக்கு நியமிக்கப்பட்டு அரசு கருவூலம் மூலம் சம்பளம் இதர பணப்பயன்கள் வழங்கப்படுவதால் உதவி இயக்குநர் பணி நிலையில் புள்ளி விபர அலுவலர் பணியிடம் ஏற்படுத்துவதால் மதுரை மாநகராட்சிக்கு செலவினம் எதுவும் இல்லை.

இ) பிறப்பு, இறப்பு பதிவு சான்று வழங்குதல், தாமதப்பதிவு, பெயர் பதிவு, திருத்தங்கள் ஆகியவை தற்போது வார்டு அலுவலகங்களிலும், மைய அலுவலக சுகாதாரப் பிரிவிலும், பதிவு வைப்பறையிலும் செயல்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு சேவை வழங்குவதில் விரைந்து செயல்பட இயலாத நிலை உள்ளது. எனவே சென்னை மாநகராட்சியில் உள்ளது போல் மதுரை மாநகராட்சியில் பிறப்பு இறப்பு பதிவுப் பிரிவு என கீழ்கண்ட அலுவலர்கள் பணியாளர்கள் கொண்ட தனிப்பிரிவு ஏற்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| 1. | மாநகராட்சிப் பதிவாளர் | ஆணையாளர் |
| 2. | கூடுதல் மாநகராட்சி பதிவாளர் | நகர் நல அலுவலர் |
| 3. | சார்பதிவாளர் – I | உதவி நகர் நல அலுவலர் |
| 4. | சார்பதிவாளர் – II, III | தலைமையிடத்து சுகாதார ஆய்வாளர்கள் |
| 5. | பிரிவு கண்காணிப்பாளர் | புள்ளிவிபர உதவியாளர் அல்லது புள்ளிவிபர அலுவலர் (உதவி இயக்குநர் பணி நிலை) |
| 6. | அமைச்சுப் பணியாளர் | ம.ந.5 எழுத்தர் |
| 7. | பதிவரை எழுத்தர் | ஒரு பதிவரை எழுத்தர் |

வரிசை எண்.2 முதல் 6 வரை கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுகாதாரப் பிரிவிலும், 7–ல் கண்ட பணியாளர்கள் பதிவு வைப்பறையிலும் பணிபுரிகின்றனர். பிறப்பு இறப்பு பிரிவு புதிதாக ஏற்படுத்துவதால் புதிதாக அலுவலர்கள் / பணியாளர்கள் எவரும் தேவையில்லை. சுகாதாரப்பிரிவிலும், பதிவு வைப்பறையிலும் தற்போது பணிபுரியும் பணியாளர்களையே நியமிக்கலாம். இதனால் கூடுதல் செலவினம் எதுவும் மாநகராட்சிக்கு இல்லை.

'அ', 'ஆ' ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அரசின் ஒப்புதல் கிடைத்தபின் அதை செயல்படுத்தவும் 'இ'-ல் குறிப்பிட்டபடி பிறப்பு இறப்பு பதிவு தனிப்பிரிவு ஏற்படுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :209</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 8) <u>ம.ந.2/ 31541/ 2007</u>

மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள 700 துப்புரவு பணியாளர் பணியிடங்களில், 40 பணியிடங்களை கொண்டு மயான உதவியாளர் என்ற புதிய பணியிடத்தியினை ரூ.2550–55–2660–60–3200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணியில் அமர்த்தி வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் : 24.10.2007 அரசாணை (2ப) எண்.198 –ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :210</u>

<u>பதிவு செய்யப்பட்டது</u>

## 9) <u>Jn.S1/03986/ 2006</u>

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ், விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தவும், மிகவும் பழமையான பாதாள சாக்கடை உள்ள பகுதிகளை சீரமைக்கவும், கழிவுநீர் ஊந்து நிலையத்தை புனரமைக்கவும், கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யவும், மதுரை மாநகராட்சியால் ரூ.229.34 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை வழங்கியுள்ளதன் மீது இத்திட்டத்தை நிறைவேற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (3டி) எண்.26, நாள் : 24.10.07 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கி உள்ள அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் :211</u>

<u>பதிவு செய்யப்பட்டது</u>

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : 24.10.2007

மதுரை மாநகராட்சி

* * * * * * *